1980 ஆகஸ்ட் 1]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட விவரம் முழுவதும் குறிப்பிலே இல்லை. ஆனால், அவர்கள் தேவைக்கான அளவுக்கு சோடா போன்ற பொருள்கள் கொடுப்பதற்கான வழிவகைகள் செய்யப்படுகின்றது. இந்தப் பொருள்கள் கூட்டுறவு சங்கங்களின்மூலம் கிடைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். பிற்பட்டோர் நலத் துறை அலுவலகமும் இதிலே கவனம் செலுத்திவருகிறார்கள்.

நாகப்பட்டினத்திலுள்ள பனிக்கட்டி நிலையம்.

*வினா எண். 89.—திரு த. வேணுகோபால்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

நாகப்பட்டினத்தில் உள்ள பனிக்கட்டி நிலையம் செயல்படாமல் இருப்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உண்மையல்ல. நாகப்பட்டினத்திலுள்ள பனிக்கட்டி நிலையம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாகப்பட்டினத்திலே உள்ள ஐஸ் கட்டி நிலையம் 6 டன், 7 டன் உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் இருந்தது. ஆனால், தற்போது 1 டன், 1 1/2 டன் தான் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் பனிக்கட்டி நிலையம் 1977 ஆம் ஆண்டு நவம்பர் முதல் 78 ஜனவரி முடிய 3 மாதங்கள் மட்டுமே அது இயங்காத நிலையில் இருந்தது. அதற்குக் காரணம், புயலால் சேதமடைந்து, பழுது ஏற்பட்டு அந்த 3 மாதத்திற்கு இயங்கவில்லை. அதற்குப் பிறகு அது தொடர்ந்து இயங்கி வருகிறது. அண்மையில் ஏற்பட்ட மின்வெட்டினால் 3 திங்கள் இயங்காமல் இருந்தது. இப்போது இந்த பனிக்கட்டி நிலையம் தொடர்ந்து இயங்கி வருகிறது. அதன் உற்பத்தித் திறன் எவ்வளவு என்ற விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும்.

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தனியார் ஐஸ் விற்பனை நிலையங்களில் விற்பனை ஆவதைவிட, அரசாங்க ஐஸ் நிலையத்திலே குறைவாக விற்பனை ஆவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரக் குறிப்பு இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐஸ் பிளாண்டிலே வெறும் தண்ணீரை உபயோகப்படுத்தி உற்பத்தி செய்யப்படுகிறது. அப்படி இருந்தும் தமிழ்நாட்டிலே இரண்டு ஐஸ் பிளாண்டுகளைத் தவிர, ஏனைய ஐஸ் பிளாண்டுகள் இயங்காததற்குக் காரணம், நிர்வாக சீர்கேடா அல்லது வேறு ஏதாவது காரணமா? என்பதை அறிய விரும்புகிறேன்? நாகப்பட்டினத்தில் தனியார் துறை ஐஸ் பிளாண்ட் திறக்கப் பட்டு லாபகரமாக நடந்து வருகிறது. அரசுத் துறையில் மட்டும் விலை கூட இருப்பதற்குக் காரணம் என்ன?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தனியாக் ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஆராய்ந்த பிறகுதான் அந்தக் குறை பாடுகளை நீக்க என்னென்ன வழிவகைகள் என்று காணவேண்டும்.

முன்சீப் நீதிமன்றங்களின் ரொக்க மதிப்பு அதிகார வரம்பு.

*வினா எண். 90—திரு பாபு ஜனார்த்தனன், திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முன்சீப் வழக்கு மன்றங்களின் ரூ. 5,000 வரையுள்ள வழக்கு கள் வரை என்று வரையறுத்துள்ளதை உயர்த்தும் உத்தேசம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஆம்.

திரு. பாபு ஜனார்த்தனன்: துணைக்கோட்ட நீதி மன்றங்களில் 5,000 ரூபாய் என்ற வரையறை வெள்ளைக்காரன் காலத்தில் நிர்ணயிக்கப்பட்டது. இந்த நிலை 50 ஆண்டுகளாக இருக்கும் காரணத்தால் பணத்தின் மதிப்புக் குறைவின் காரணமாக ஐயா யிரம் என்ற தொகையை உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஐயாயிரத்திலிருந்து தற் போது பதினைந்தாயிரம் வரை முன்சீப் கோர்ட்டுகளுக்கு வருகிற வழக்குகளை ஏற்கவேண்டுமென்ற சட்டத்தை இயற்ற இருக் கிறோம். அதன் காரணமாக டிஸ்ட்ரிக் கோர்ட்டில் அப்பீல் 30,000 ரூபாய் வரை வந்துவிடும். உயர்நீதிமன்றத்திற்கு வர வேண்டிய கஷ்டம் பொதுமக்களுக்கு குறையவேண்டும் என்ற நோக்கத்துடன் அவர்களுடைய கஷ்டத்தைத் தீர்க்க வேண்டு மென்ற நோக்கத்துடன் இது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட இருக்கிறது.